Mettur Township Committee

* 242 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) Whether a Township Committee has been constituted at Mettur Dam;

(*b*) if so, whether the members are elected or nominated by Government and their term of membership ; and

(*c*) the total number of members on the Committee with their names at present?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ), (இ) & (உ) மேட்டூர், மேட்டூர் நகரிய சட்டத்தின்கீழ் 1940-ல் ஓர் நகரியமாக அமைக்கப்பட்டது. அக்குழுவின் உறுப்பினர்களாகக் கீழ்க்கண்டவர்கள் நியமிக்கப்பட்டனர். இவர்கள் 4—8—1969-லிருந்து மூன்று ஆண்டுக்காலம் அங்கத்தினர்களாக இருப்பார்கள் :—

அலுவலர்கள்.

1. சேலம் மாவட்ட ஆட்சியாளர் (தலைவர்).
2. செயல் பொறியாளர், கட்டடத்துறை, சேலம் டிவிஷன், மேட்டூர் அணை.
3. கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை, கிராம வேலைகள்), சேலம்.
4. மாவட்ட சுகாதார அதிகாரி.
5. துணை ஆட்சித் தலைவர், மேட்டூர் அணை.

அலுவல் சார்பற்றவர்கள்.

1. திரு. ஆர். கருப்பண்ண பிள்ளை, திரு. ராமசாமி பிள்ளை அவர்களின் குமாரர், ஒப்பந்தக்காரர், மேட்டூர் அணை.
2. திரு. ஏ. பாலு, திரு. அம்ப்ரோஸ் அவர்கள் குமாரர், செயலர், மேட்டூர் தாலுகா திராவிட முன்னேற்றக் கழகம், ஜே 2, சேலம் முகாம் மேட்டு அணை.
3. திரு. புருஷோத்தம், பணி மேலாளர், மெட்ராஸ் அலுமினியம் கம்பெனி, மேட்டூர் அணை.
4. திரு. எஸ். கந்தப்பன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்.

DR. H. V. HANDE : May I know whether complaints were received by this Government that some irregularity has taken place in the appointment of these members and if so may I know the details thereof and the action taken by Government?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதுபற்றிய முறையீடு எதுவும் வந்ததாக எனக்குத் தகவல் இல்லை. அப்படி முறையீடு வந்திருக்குமானால் தக்க முடிவுகள் எடுக்கப்படும். மேட்டூர் நகரியமாக இருப்பதை நகராட்சியாக மாற்ற வேண்டுமென்று கோரிக்கைகள் வந்திருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. சுரேந்திரன் அவர்களும் அதுபற்றித் தெரிவித்திருக்கிறார்கள்.

1971 ஜூலை 15]

திரு. எம். சுரேந்திரன்: தலைவர் அவர்களே, மேட்டூர் நகரியக்குழு 1940ல் ஏற்பட்டது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். முன்பு போதுமான வருமானம் வராத காரணத்தினாலே இது நகராட்சியாக மாற்ற இயலாது என்று கூறிவிட்டார்கள். இப்போது போதுமான வருமானமும் இதர வசதிகளும் இருக்கிற காரணத்தால் இதை நகராட்சியாக அமைக்க அரசாங்கம் தக்க ஏற்பாடுகளைச் செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். நகரியமாக இருக்குமானால் அதிகாரிகளுடைய நல்ல தொடர்பு இருக்கிறது. சிறிய அளவிலே குழு அமைக்கப்பட்டிருக்கிறது. தொழிற்சாலைகள் பல ஏற்படுவதற்கு வசதிகள் ஏற்பட்டு, தொழிலாளர்களும் ஏராளமாக இருக்கிறார்கள். வேலைகள் விரைவாகவும் செம்மையாகவும் நிறைவேற்றப்படலாம் என்பதற்காகத்தான் நகரியமாக அமைக்கப்பட்டது. உடனடியாகப் பலன் தரும் என்ற வகையிலே தான் மேட்டூர் நகரியமாக அமைக்கப்பட்டது. அந்த வகையிலேதான் பத்து நகரங்கள் அதாவது ஆவடி, கத்திவாக்கம், மாதவரம் போன்ற நகரங்கள் நகரியமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. நகரியமாக இருப்பதால் பணிகள் விரைவாகவும், செம்மையாகவும் நடக்கும். நகராட்சியைவிட நகரியமாக இருப்பதால் பணிகள் செம்மையாகவும் விரைவாகவும் செய்ய முடியும் என்பது தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. சொ. காவேரிமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் துறையில் ஆலை நடத்துகிறவர்கள் தங்கள் தொழிலாளர்களுக்குக் குடியிருப்புக் கட்டிக்கொடுத்திருக்கிறார்கள். அவை நகரியங்களாகவும் இருக்கின்றன. அப்படிப்பட்ட நகரியங்களுக்கு அரசு எந்த வகையில் மானியம் அளிக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தனிக்கேள்வி போடவும்.

திரு. எம். சுரேந்திரன்: சார், அமைச்சர் அவர்கள் பதில்சொல்லுகின்ற பொழுது அந்த நகரியக் குழுவினால் ஏற்படுகின்ற நலன்களைப் பற்றிச் சொன்னார்கள். அது புதிதாக அமைக்கப்பட்டவைகளுக்குத்தான் பொருந்துமே தவிர, அணை கட்டுகின்ற காலத்திலே அங்கு இருக்கிறவர்கள் வசதிக்காக ஏற்படுத்தப்பட்டது அது, இப்பொழுது வளர்ந்து வருகின்ற ஜனத்தொகை, வருமானம், ஜனநாயகக் கோட்பாடு இவற்றின் காரணமாக அதை நகரசபையாக மாற்றவேண்டுமென்று, ஜனங்களுடைய பிரதிநிதிகள் பொறுப்பேற்கவேண்டுமென்றும் கோரி அந்தப் பகுதியிலுள்ள மக்கள் மகஜர் அனுப்பியிருக்கிறார்கள். அதை அரசு முறையாகப் பரிசிலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட கோரிக்கை வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று நகரியமாக அது 30 ஆண்டுகளுக்கு முன்னேயிருந்து இருக்கிறது. அதை இப்பொழுது மறுபரிசிலனை செய்வதிலே தவறில்லை. நகரமன்றமாக இருந்தால் பலன் ஏற்படும் என்ற சூழ்நிலை இருக்குமானால் அதை புனராலோசனை செய்வதில் தடை இருக்காது. அரசாங்கம் அதைப்பரிசிலித்து தக்க முடிவு எடுக்கலாம்.

திரு. இ. எஸ். தியாகராசன்: தலைவர் அவர்களே, நகரியங்களுக்கு உறுப்பினர்களுக்கு யோக்கியதாம்சங்கள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: உறுப்பினர்கள் அரசாங்க அலுவலர்களாகவும் இருப்பார்கள், அல்லது அரசுச் சார்பற்றவர்களும் இருப்பார்கள் என்ற முறையிலேதான் அமைக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக அந்த ஊரில் அக்கறை கொண்டவராகவும், பல்வேறு வகைகளிலே பிரதிநிதித்துவம் உள்ளவராகவும் இருந்தால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். எனவே இதியே என்ன என்ன வகையில் அவர்கள் பொருத்தமாக இருக்கவேண்டுமென்ற திட்டவட்டமான குறிப்பு எதுவும் இல்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம்: பொதுவாக அந்த நகரத்திலே அக்கறை கொண்டவராகவும் பல்வேறு வகைகளில் ஈடுபட்டவராகவும் இருக்கவேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கனவே அந்தக் குழுவில் சட்டமன்ற உறுப்பினர் ஒரு உறுப்பினராக இருந்தாரே, இந்தத் தடவை அமைச்சர் அவர்கள் படித்த பட்டியலிலே சட்ட மன்ற உறுப்பினரைக் காணோமே, என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: கூடுமானவரையில் சட்ட மன்ற உறுப்பினர்களைப் போடுகின்ற பழக்கம்தான் இருந்துவருகிறது. இது 1969-லே அமைக்கப்பட்டபொழுது என்ன காரணத்தினாலோ போடப்படவில்லை. சட்ட மன்ற உறுப்பினர், பாராளுமன்ற உறுப்பினர் இவர்கள் அந்த அந்த நகரியங்களிலே உள்ள குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட வேண்டுமென்று சட்டம் இல்லை, நியமிக்கப்படுவார்களானால் நல்லது என்ற கொள்கை இருந்து வருகிறது. அந்தக் குழுவிலே பாராளுமன்ற உறுப்பினராக முன்பு இருந்த திரு. கந்தப்பன் அவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள், சட்ட மன்ற உறுப்பினர் விடப்பட்டிருக்கிறார்கள்.

Loans for production of films.

238 Q—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Chief Minister be pleased to state whether there are proposals under the consideration of the Government to advance loans to the producers of historic and patriotic films?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், தமிழகத்திலே தேசிய இயக்கத்திலே ஈடுபட்டவர்கள், அப்படி இடுபட்ட தொழிற்சங்கத் தலைவர் திரு. சிங்காரவேலு செட்டியார், திரு. வி. கே. சர்க்கரை செட்டியார் தேசிய இயக்கத்திலே ஈடுபட்டு நாடகக் கலைகள் மூலம் அந்தக் கருத்துக்களைப் பரப்பிய விஸ்வநாததாஸ் போன்றவர்களைப்பற்றியெல்லாம் குறிப்பிடாத நிலையில் இருந்து வருகின்ற காரணத்தினால் அப்படிப்பட்ட படங்களை எடுப்பதற்கு அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அரசு எடுக்கின்ற செய்தித் துறை படங்களில் வேண்டுமானால் அவர்களுடைய வாழ்க்கைக் குறிப்புகளை இணைக்கலாம். முழு நீளப் படம் எடுத்தால் மிகப் பிரசித்திபெற்ற